ERIEZ

# உலகலாவிய சப்ளையர்களுக்கான நடத்தை விதித்தொகுப்பு

எங்கள் விதித்தொகுப்பு மற்றும் எதிர்பார்ப்புகள்

# உலகலாவிய சப்ளையர்களுக்கான நடத்தை விதித்தொகுப்பு

## எங்கள் விதித்தொகுப்பு மற்றும் எதிர்பார்ப்புகள்




Eriez இல், நம்முடைய மதிப்புகள்- **வாடிக்கையாளர்களே முதன்மையானவர், ஒரே Eriez, அதிகாரமளித்தல், நேர்மை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம்.** இந்த மதிப்புகளை அடித்தளமாக கொண்டே நாங்கள் தொழில் செய்கிறோம். இதே மதிப்புகளைப் பின்பற்றும் மற்றும் தங்கள் செயல்பா-டுகளில் மிக உயர்ந்த நன்னெறியுடன் கூடிய நடத்தை, நேர்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றைப் பின்பற்றும் சப்ளையர்களுடன் இணைந்து பணிபுரிவதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். இந்த உலக-ளாவிய
சப்ளையர் நடத்தை விதித்தொகுப்பானது ("விதித்தொகுப்பு") நமது சப்ளையர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் குறைந்தபட்ச தராதரங்களைக் குறிப்பிடுகிறது.

Eriez நடத்தை விதித்தொகுப்பு மற்றும் நன்னெறி வழிகாட்டி சேர்ந்து நம்முடைய விதித்தொகுப்பு பின்பற்றப்படுகிறது

இது நமது உலகளாவிய சப்ளை செயினில் உள்ள அனைத்து
சப்ளையர்களுக்கும் பொருந்தும். உள்ளூர் சட்டங்களும் இந்த விதித்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள தராதரங்களும் முரண்படும் பட்சத்தில், சப்ளையர்கள் உயர்ந்த தராதரங்களைப் பின்பற்ற வேண்டும். இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம், நமது தொழில்ரீதியான தொடர்புகளின் அனைத்து பகுதியிலும் Eriez - இன் மதிப்புகள் பின்பற்றப்படுவதற்கு சப்ளையர்கள் உதவுகிறார்கள்.

# உலகலாவிய சப்ளையர்களுக்கான நடத்தை விதித்தொகுப்பு

## எங்கள் விதித்தொகுப்பு மற்றும் எதிர்பார்ப்புகள்

### நெறிமுறைகள் மற்றும் ஆளுகை

ஊழியர்கள், சப்ளையர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, நமது சப்ளையர்கள், மிக உயர்ந்த நன்னெறியுடன் கூடிய நடத்தையைப் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள் மற்றும் Eriez இன் நெறிமுறைத் தராதரங்களுக்கு கட்டுப்பட்டு நடந்துக்கொள்ள சப்ளையர்கள் வலுவான ஆளுகை நடைமுறைகளை அமல்படுத்த வேண்டும். நெறிமுறைக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகள் அல்லது தவறான நடத்தைகள் நம்பிக்கையைக் குறைக்கின்றன, மேலும் அவற்றை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள மாட்டோம்.

### ஊழல் மற்றும் லஞ்சம் எதிர்ப்பு

Eriez தானும் அதன் சப்ளையர்களும் மிக உயர்ந்த உத்தமத்தைக் காக்க உறுதிகொண்டுள்ளது. லஞ்சம், ஊழல், மிரட்டி பணம் பறித்தல் அல்லது கையாடல் ஆகிய அனைத்தையும் துளியும் அனுமதிக்காத கொள்கையை நாங்கள் பின்பற்றுகிறோம். தொழில்ரீதியான முடிவுகளில் செல்வாக்கு செலுத்த முயற்சித்தல் அல்லது மட்டுக்குமீறி அனுகூலப்படுத்திக்கொள்ளுதல் போன்ற எந்தவொரு நடவடிக்கையும் இதில் அடங்கும்.

சப்ளையர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மூன்றாம் தரப்பினர் மூலம் லஞ்சம், கட்டணம் செலுத்துதல் கையூட்டுகள் அல்லது பிற முறையற்ற நன்மைகளை வழங்கவோ, அனுமதிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ கூடாது. இதில் அரசியல் நன்கொடைகள், பரிசுகள் அல்லது தொழில்ரீதியான முடிவுகளில் செல்வாக்கு செலுத்தும் பொழுதுபோக்குகள் ஆகியவை அடங்கும். பொருந்தக்கூடிய ஊழல் தடுப்புச் சட்டங்களுக்கு முழுமையாக இணங்குவதை உறுதிசெய்ய அனைத்து தொழில் சம்பந்தமான செயல்பாடுகளும் துல்லியமாகப் பதிவுசெய்யப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

இந்த விதித்தொகுப்பு அல்லது Eriez இன் தொழில் நடத்தை விதித்தொகுப்பு மற்றும் நெறிமுறை வழிகாட்டி மீறப்படுவதை ஒரு சப்ளையர் அறிந்தால், அது குறித்து Navex ஆல் நிர்வகிக்கப்படும் Eriez“ புகார் உதவி எண் அழைத்து அதை இரகசியமாக புகாரளிக்குமாறு நாங்கள் அவர்களை உற்சாகப்படுத்-துகிறோம்.

### போட்டிகள் மற்றும் நியாயமான நடைமுறைகள்

சப்ளையர்கள், விலை நிர்ணயம், ஏல மோசடி, மற்றும் போட்டியாளர்களுடன் முக்கியமான தகவல்களைப் பகிர்தல் தொடர்பானவை உட்பட நிறுவனங்களுக்கு இடையிலான போட்டிகளை நெறிமுறைப்படுத்தும் பொருந்தக்கூடிய அனைத்து போட்டிச் சட்டங்களுக்கும் இணங்கி நடக்க வேண்டும். ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் சட்ட மற்றும் நன்னெறி தராதரங்களுக்கு இணங்கி நடப்பதோடு, சப்ளையர்கள் நியாயமாகவும் ஒளிவுமறைவில்லாமல் வெளிப்படைத்தன்மையுடனும் நடந்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

### கருத்து முரண்பாடு

Eriez உடன் தொழில் செய்யும்போது பாரபட்சமின்றி செயல்படுவதை பாதிக்கக்கூடிய எந்தவொரு கருத்து முரண்பாடுகளையும் சப்ளையர்கள் தவிர்க்க வேண்டும். கருத்து முரண்பாடுக்கான வாய்ப்பு இருந்தால் அல்லது உண்மையிலேயே கருத்து முரண்பாடு ஏற்பட்டால், தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதனை உடனடியாக Eriez க்கு தெரியப்படுத்த வேண்டும்.

### தரவு இரகசியத்தன்மை & தனியுரிமை

சப்ளையர்கள் தனிநபர்களின் தனியுரிமை உரிமைகளை மதிக்க வேண்டும் மற்றும் தனிப்பட்ட தரவு சேகரிக்கப்படும்போது, சேமிக்கப்படும்போது, செயலாக்கப்படும்போது, அனுப்பப்படும்போது அல்லது பகிரப்படும்போது பொருந்தக்கூடிய அனைத்து தரவுப் பாதுகாப்புச் சட்டங்களுக்கும் இணங்க வேண்டும். தனிப்பட்ட தரவை கவனமாகவும் இரகசியமாகவும் நிர்வகிப்பதற்கான பொறுப்பு Eriez மற்றும் அதன் சப்ளையர்கள் ஆகிய இருவருக்குமே உள்ளது, இதன் மூலம் தனிப்பட்ட தரவானது சரியான முறையில் பயன்படுத்தப்படுவதோடு அதனை எவரும் அனுமதியின்றி அணுக முடியாது.

# உலகலாவிய சப்ளையர்களுக்கான நடத்தை விதித்தொகுப்பு

## எங்கள் விதித்தொகுப்பு மற்றும் எதிர்பார்ப்புகள்

### அறிவுசார் சொத்து

சப்ளையர்கள் அறிவுசார் சொத்துரிமைகளை மதிக்க வேண்டும் மற்றும் அறிவுசார் சொத்துரிமையை நிர்வகிக்கும் அனைத்து சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க வேண்டும். தனியுரிம தகவல் மற்றும் தொழில்நுட்பம் பாதுகாக்கப்படுவதையும் தவறான முறையில் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் உறுதி செய்வதும் இதில் அடங்கும். சப்ளையர்கள் Eriez இன் இரகசியத் தகவல்களையும் பாதுகாக்க வேண்டும், அதை அதன் உத்தேசிக்கப்பட்ட தொழில் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் மற்றும் முறையான அனுமதியுடன் மட்டுமே அவற்றை வெளிப்படுத்த வேண்டும்.



### தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு

முக்கியமான தரவு, அறிவுசார் சொத்தைப் பாதுகாப்பதற்கும் தொழில் செயல்பாடுகளுக்கும் வலுவான தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு நடைமுறைகள் அவசியமாகும். சப்ளையர்கள் உயர்தரமான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் சாத்தியமான அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாக்க பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் நிறுவன நடவடிக்கைகளை அமல்படுத்த வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். தகவல் பாதுகாப்பிற்கான கூட்டு அணுகுமுறையை உறுதிப்படுத்த சப்ளையர்கள் Eriez உடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும்.

### உலகளாவிய தொழில் இணக்கம் & அனுமதிகள

சப்ளையர்கள் அனுமதிகள் மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகள் உட்பட பொருந்தக்கூடிய அனைத்து உலகளாவிய தொழில் சட்டங்களுக்கும் முழுமையாக இணங்கி தொழில் செய்ய வேண்டும். இதில் தயாரிப்புகள், சேவைகள், தொழில்நுட்பம் ஆகியவற்றின் போக்குவரத்து மற்றும் நிதி பரிவர்த்தனைகள் முதலியவற்றை நிர்வகிக்கும் சட்டங்களுக்கு இணங்குவது அடங்கும். சப்ளையர்கள் தற்போது அமலில் உள்ள சட்டங்களைப் பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டும் மற்றும் அனைத்து தொடர்புடைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு அவர்கள் தொழில்புரிய வேண்டும்.

### நெறிமுறைகள் & குறைகளைப் புகாரளித்தல

நெறிமுறை சார்ந்த குறைகள் அல்லது தவறான நடத்தைகளை புகாரளிக்க ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஒளிவுமறைவில்லாத வெளிப்படையான ஒரு அமைப்பை சப்ளையர்கள் வழங்க வேண்டும். இந்தப் அமைப்பு உள்ளூர் சட்டங்களுக்கு இணங்க வேண்டும், புகாரிப்பவரின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடாது மற்றும் நல்லெண்ணத்துடன் பிரச்சனைகளைத் தெரிவிப்பவரை பழிவாங்கல்களிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

எதிர்மறையான விளைவுகளைப் பற்றிய பயமின்றி தைரியமாக பேசுவதற்கு ஊழியர்களுக்கு அதிகாரம் இருப்பதாக உணரும் ஒரு நெறிமுறை சார்ந்த கலாச்சாரத்தை சப்ளையர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

# உலகலாவிய சப்ளையர்களுக்கான நடத்தை விதித்தொகுப்பு

## எங்கள் விதித்தொகுப்பு மற்றும் எதிர்பார்ப்புகள்

### தரத்திற்கு உத்தரவாதம்

ஒப்புக்கொள்ளப்பட்ட தரம் மற்றும் பாதுகாப்பு தராதரங்களின்படி தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சப்ளையர்கள் உற்பத்தி செய்து வழங்க வேண்டும். Eriez தனது வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த சேவையை வழங்குவதற்கு, தர நிர்வாகத்தில் தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் விவரக்குறிப்புகளின்படி தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவது முக்கியமானவையாகும். சப்ளையர்கள் தங்கள் செயல்பாடுகள் அனைத்திலும் உயர்ந்த அளவிலான தராதரங்களைப் பின்பற்ற வேண்டும், மேலும் போலியான பொருட்கள் தொடர்பான அபாயங்களை முன்கூட்டியே கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், இதில் Eriez க்கான பொருட்கள் அல்லது சேவைகளைப் பாதிக்கும் இதுபோன்ற போலியான பொருள்கள் பற்றி Eriez க்கு தெரிவிப்பதும் அடங்கும்.



### வரிகள் மற்றும் நிதிசார்ந்த பொறுப்புகள

சப்ளையர்கள் வரிகள், கணக்கு வழக்கு மற்றும் நிதி அறிக்கை தொடர்பான அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அனைத்து நிதி பரிவர்த்தனைகளும் ஒளிவு மறைவில்லாமல் வெளிப்படையானதாக இருக்க வேண்டும், மேலும் சப்ளையர்கள் தவறு இல்லாத துல்லியமான பதிவேடுகளையும் அவற்றை சரியான நேரத்திலும் பராமரிக்க வேண்டும். நமது உலகளாவிய சப்ளை சங்கிலியில் நேர்மை மற்றும் பொறுப்புடைமையை நிலைநிறுத்துவதற்கு இந்தக் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பது அவசியமாகும்.

### ஊழியர்களிடம் நியாயமான முறையில் நடந்துக்கொள்ளுதல் & மனித உரிமைகள்

தனது சப்ளையர்கள் சப்ளை செயின் முழுவதிலும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை ஏற்றுக்கொண்டு கடைபிடிக்க வேண்டும் என்று Eriez கூறுகிறது. மனித உரிமைகளுக்கான சர்வதேச மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வேலையிட உரிமைகள் குறித்து சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகள் ஆகியவை இதில் அடங்கும். இந்த தராதரங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். ஆகவே சப்ளையர்கள் தங்கள் சொந்த செயல்பாடுகள் மற்றும் அவர்களின் மதிப்பு சங்கிலி முழுவதும் ஏதேனும் விதிமீறல்கள் ஏற்பட வாய்ப்பு இருந்தால், அதனை உடனே அடையாளம் கண்டு சரிசெய்ய தீவிரமாகப் பணியாற்ற வேண்டும்.

### நவீன கொத்தடிமை, ஆட்கடத்தல் மற்றும் வலுக்கட்டாயமாக வேலையில் உட்படுத்துதல்

அனைத்து வேலைகளும் சுயவிருப்பமுடன் செய்யப்பட வேண்டும். கட்டாயப்படுத்தியோ, கொத்தடிமையாகவோ (கடன் கொத்தடிமை உட்பட) வேலை செய்ய வைப்பது அல்லது ஒப்பந்தத்துக்குட்பட்ட தொழிலாளர்கள், விருப்பமற்ற சிறை கொத்தடிமை, அடிமைத்தனம் அல்லது ஆட்கடத்தல் ஆகியவற்றை Eriez ஒருபோதும் அனுமதிப்பதில்லை. சப்ளையர்கள் முறைசாரா செயல்களில் ஈடுபடக் கூடாது, அதாவது மிரட்டல், பலவந்தம், வலுக்கட்டாயம், கடத்தல் அல்லது மோசடிக்கு உட்பட்ட நபர்களை வேலையோ அல்லது சேவைகளுக்காகக் கொண்டுசெல்லுதல், தங்கவைத்தல், நியமித்தல், மாற்றுதல் அல்லது பெறுதல் போன்றவை செய்யக்கூடாது. தொழிலாளர்களின் நடமாட்ட சுதந்திரம் நியாயமற்ற முறையில் கட்டுப்படுத்தப்படக்கூடாது, மேலும் சப்ளையர்கள் வேலையாட்களிடமிருந்து வைப்புத்தொகையோ அல்லது அடையாள ஆவணங்களை தங்கள்வசம் வைத்திருக்கவோ கோரக்கூடாது. தெளிவான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய வேலைவாய்ப்பு விதிமுறைகள் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும், மேலும் எந்த ஒழுங்கு நடவடிக்கைகளும் தகுந்த முறையில் ஆவணத்தில் எழுதப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

# உலகலாவிய சப்ளையர்களுக்கான நடத்தை விதித்தொகுப்பு

## எங்கள் விதித்தொகுப்பு மற்றும் எதிர்பார்ப்புகள்

### குழந்தைத் தொழிலாளர்

Eriez அதன் சப்ளை செயினின் எந்தக் கட்டத்திலும் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்தக்கூடாது என முற்றிலும் தடைசெய்கிறது. "குழந்தை" என்ற சொல்லானது கட்டாயக் கல்வி முடிக்க வேண்டிய வயதில் உள்ள அல்லது சப்ளையர்கள் தொழில் செய்து வருகின்ற நாட்டில் வேலை செய்வதற்கான குறைந்தபட்ச வயதிற்கும் குறைவான வயதுடைய எந்தவொரு நபரையும் குறிக்கிறது. சப்ளையர்கள் நம்பகமான செயல்முறை மூலம் தங்கள் தொழிலாளர்களின் வயதை சரிபார்க்க வேண்டும். உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கும் முறையான வேலையிட பயிற்சித் திட்டங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. 18 வயதிற்குட்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்களின் உடல்நலம், பாதுகாப்பு அல்லது நல்வாழ்வை பாதிக்கக்கூடிய அல்லது அவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிக்கும் வேலைகளை வழங்கக்கூடாது. குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக தெரியவந்தால், சப்ளையர் குழந்தையின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும், அவர்கள் கட்டாய பள்ளிக்குச் செல்வதையும் பொருத்தமான உதவியை பெறுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

### பன்முகத்தன்மையும் அனைவரையும் உள்ளடக்கிய பணிச்சூழல்

Eriez இல் நாங்கள், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் வளர்ச்சியை அதிகரிக்க பலதரப்பட்ட நபர்களைக் கொண்ட பன்முகத்தன்மையும் அனைவரையும் உள்ளடக்கிய பணிச்சூழலும் முக்கியமானவை என்று நம்புகிறோம். நம்முடைய சப்ளையர்கள் துன்புறுத்தல் மற்றும் சட்டவிரோத பாகுபாடு இல்லாத பன்முகத்தன்மையையும் அனைவரையும் உள்ளடக்கிய பணிச் சூழலையும் பேண வேண்டும். சப்ளையர்கள் ஊழியர்களின் பணியமர்த்தல், பதவி உயர்வுகள், பயிற்சி அல்லது இழப்பீட்டு நடைமுறைகளில் இனம், நிறம், பாலினம், பாலியல் சார்பு, பாலின அடையாளம், ஊனம், மதம் அல்லது வேறு ஏதேனும் பாதுகாக்கப்பட்ட அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது. தொழிலாளர்களின் மத பழக்கவழக்கங்களுக்கு உரிமையளித்து நியாயமாக நடந்துகொள்ள வேண்டும், மேலும் மருத்துவ பரிசோதனையின் அடிப்படையில் எந்தவொரு தொழிலாளியிடமும் பாகுபாடு காட்டக்கூடாது.

### வேலை நேரம்

சப்ளையர்கள் வேலை நேரம் தொடர்பான உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஏழு நாட்களுக்கும் குறைந்தது ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும். தொழிலாளர்கள் தொடர்ச்சியாக ஆறு நாட்களுக்கு மேல் வேலை செய்யக்கூடாது.

### வாழ்க்கை ஊதியம்

தொழிலாளர்களுக்கு ஊதியங்கள் வழங்கப்படும்போது குறைந்தபட்ச ஊதியச் சட்டங்கள், கூடுதல் நேர விதிமுறைகள் மற்றும் சட்டப்பூர்வ கட்டாய சலுகைகள் உட்பட பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களையும் கடைபிடிக்க வேண்டும். ஒழுங்கு நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஊதியத்தைப் பிடித்தம்செய்வதை Eriez முற்றிலும் அனுமதிப்பதில்லை. சப்ளையர்கள் பொருத்தமான விடுப்பு காலங்கள் மற்றும் விடுமுறைகளை வழங்க வேண்டும், வழக்கமான மற்றும் சரியான நேரத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். தற்காலிக தொழிலாளர்கள் மற்றும் அவுட்சோர்ஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களை உள்ளூர் சட்டங்களின்படி பயன்படுத்த வேண்டும்.

### முரண்படும் கனிமங்கள்

பொருந்தும்பட்சத்தில், சப்ளையர்கள் தங்கள் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் டான்டலம், டின், டங்ஸ்டன் மற்றும் தங்கம் ஆகியவற்றை கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் வாங்குவதற்கு கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை வகுத்து பின்பற்ற வேண்டும். சப்ளையர்கள் மோதலால் பாதிக்கப்பட்ட மற்றும் அதிக ஆபத்துள்ள பகுதிகளிலிருந்து கனிமங்களின் பொறுப்பான சப்ளை செயின்களுக்கான OECD இன் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும், மேலும் Eriez இன் கோரிக்கையின் பேரில் பொருத்தமான அறிக்கைகளை அதற்கு வழங்க வேண்டும்.

# உலகலாவிய சப்ளையர்களுக்கான நடத்தை விதித்தொகுப்பு

## எங்கள் விதித்தொகுப்பு மற்றும் எதிர்பார்ப்புகள்



### ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

"பாதுகாப்புக்கே முதலிடம்" என்ற கலாச்சாரத்தை வளர்ப்பதில் Eriez உறுதியாக உள்ளது, மேலும் சப்ளையர்கள் உள்ளூர் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புத் தராதரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் அல்லது அதைவிட சிறப்பாக செயல்பட வேண்டும். வேலை செய்யும்போது ஏற்படும் காயங்கள் மற்றும் நோய்கள் தொடர்பான அபாயங்களைக் குறைக்க சப்ளையர்கள் சிறந்த பாதுகாப்புத் திட்டங்களை அமல்படுத்த வேண்டும், தொழிலாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை வழங்க வேண்டும், மேலும் கர்ப்பிணி அல்லது செவிலியர் ஊழியர்களுக்கு பொருத்தமான இடவசதிகளையும் செய்து தர வேண்டும். சப்ளையர்கள் அவசரகால தயார்நிலைத் திட்டங்களையும் வைத்திருக்க வேண்டும், மேலும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அவர்கள் புரிந்துகொள்ளும் மொழியில் பயிற்சி அளிக்க வேண்டும்.

### சுற்றுச்சூழல்

சுற்றுச்சூழல் பொறுப்புடைமை என்பது Eriez-இன் செயல்பாடுகளில் ஒரு பகுதியாகும். நம்முடைய சப்ளையர்கள் தங்களுடைய செயல்பாடுகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீங்கைக் குறைக்க முயற்சிக்க வேண்டும் மற்றும் அனைத்து உள்ளூர் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும். சப்ளையர்கள் உமிழ்வுகளைக் குறைக்கவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், அபாயகரமான பொருட்களை சிறந்த முறையில் நிர்வகிக்கவும் முயற்சிக்க வேண்டும். ISO 14001: 2015 சுற்றுச்சூழல் மேலாண்மை தராதரத்தை ஏற்றுக்கொள்ள நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். சப்ளையர்களின் ஆற்றல் நுகர்வு மற்றும் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வுகளைக் கண்காணித்து குறைப்பதன் மூலம் மாசற்ற உமிழ்வு என்ற நிலையை அடைய வேண்டும் எனும் Eriez இன் உறுதிப்பாட்டுக்கு சப்ளையர்கள் பங்களிக்க முயற்சிக்க வேண்டும்.

### விதித்தொகுப்பைக் கடைபிடித்தல்

சப்ளையர்கள் தங்கள் ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் மற்றும் துணை ஒப்பந்ததாரர்கள் இந்த நடத்தை விதித்தொகுப்பை கடைபிடிக்கிறார்களா என உறுதி செய்ய வேண்டும். அவ்வப்போது சோதனை செய்து கடைபிடிக்கவில்லை எனில் அதை கண்டுபிடித்து சரிசெய்ய முயற்சிக்க வேண்டும், மேலும் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் உடனடியாக Eriezக்குத் தெரிவிக்க வேண்டும். சப்ளையர்கள் செயல்திறன் மதிப்பீட்டுக்காக அது தொடர்பான தகவல்கள் மற்றும் வசதிகளை Eriezக்கு வழங்க வேண்டும். இந்த விதித்தொகுப்பை கடைபிடிக்கிறார்களா என சரிபார்க்க தணிக்கைகள் நடத்தப்படலாம்.

எங்கள் நடத்தை விதித்தொகுப்பு தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது குறைகள் இருந்தால், தயவுசெய்து எங்களை தொடர்பு கொள்க: eriez@eriez.com அல்லது https://www.eriez.com/APAC/Company/Terms-Conditions.htm.

ERIEZ
GLOBAL LEADER IN SEPARATION TECHNOLOGIES

HEADQUARTERS
2200 Asbury Road • Erie, PA 16506-1402 U.S.A. • +1-814-835-6000 • eriez@eriez.com • www.eriez.com

Manufacturing Facilities: AUSTRALIA • BRAZIL • CANADA • CHILE • CHINA • GERMANY • INDIA • JAPAN • MEXICO • PERU • SOUTH AFRICA • UNITED KINGDOM • UNITED STATES

©2025 Eriez Manufacturing Co. All Rights Reserved.

ECP-8P-012025